**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண். 3162/ஆ5/2023, நாள். .09.2023**

.....

பொருள் பள்ளிக் கல்வி – மனநலம் மற்றும் வாழ்வியல் திறன் சார்ந்த பயிற்சி மாணவர்களுக்கு உயர்தொழில்நுட்ப ஆய்வகத்தின் மூலம் கணினி வாயிலாக அளித்தல் – தொடர்பாக

பார்வை
1. மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்களின் சட்டபேரவை அறிவிப்புகள் 2023-2024 அறிவுப்பு எண். 16
2. சென்னை -6, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.4913/ SCERT / E4/169/2023, நாள்.21.07.2023 மற்றும் 31.08.2023
3. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள். 28.07.2023

.....

வேலூர் மாவட்டம், **அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 9 முதல் 12ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு** மனநலம் மற்றும் வாழ்வியல் திறன் சார்ந்த பயிற்சி செயல்பாடுகள் மின்னுருவாக்கம் செய்து EMIS இணைய தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக பார்வை 3-ல் காணும் இவ்வலுவலகம் கடிதம் மூலம் அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் உயர் / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டது.

இந்த செயல்பாடுகளை பள்ளிகளில் அமைந்துள்ள உயர்த்தொழில்நுட்ப ஆய்வகத்தின் மூலம் மாணவர்கள் செய்ய வேண்டும். https://tnstudents.tnschools.gov.in/ என்ற link-ஐ click செய்து மாணவர்களின் User ID மற்றும் Password உள்ளீடு செய்து செயல்பாடுகளை செய்ய வேண்டும். மாணவர்கள் உள்ளீடு செய்து செயல்பாடுகளை செய்வதற்குரிய படிநிலைகள் இந்த Link-ல் https://tnschools.gov.in/scert/?lang=ta கொடுக்கப்பட்டுள்ளது. மேலே கொடுக்கப்பட்டுள்ள இரண்டு இணைய Link- ஐயும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு தெரியப்படுத்தவேண்டும். மாணவர்கள் கட்டகத்தில் உள்ள செயல்தாள்களை செய்து கற்றுக் கொண்டதை மதிப்பீடு செய்து அதன் தரவுகளை கல்வித் தகவல் மேலாண்மை தொகுப்பமைப்பு வாயிலாக சேகரித்தல் வேண்டும். எனவே இவ்வாறான பணிகளை மேற்கொள்ள அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

1. மாணவர்கள் செயல்பாடுகளை செய்வதற்கான Link https://tnstudents.tnschools.gov.in/
2. மாணவர்கள் உள்ளீடு செய்து செயல்பாடு செய்வதற்குரிய படிநிலைகள் Link https://tnschools.gov.in/scert/?lang=ta

//ஒப்பம்//
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

**பெறுநர்**
தலைமையாசிரியர்கள்,
அரசு / அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளிகள், வேலூர் மாவட்டம்.
**நகல்**
1. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர்,
(இடைநிலைக் கல்வி) வேலூர் மாவட்டம்,
(தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு)